பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 83** **நாள் : 26.06.2019**

# பெருநகர சென்னை மாநகராட்சி, கோவளம் வடிநிலப்பகுதிகளில் உள்ள நீர்பிடிப்பு பகுதிகளில் அமைக்கப்படவுள்ள ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகள் குறித்து ஜெர்மன் வளர்ச்சி வங்கியின் அதிகாரிகளுடனான ஆலோசனைக் கூட்டம் ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

= = = = =

பெருநகர சென்னை மாநகராட்சி, கோவளம் வடிநிலப்பகுதிகளில் உள்ள நீர்பிடிப்பு பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்வது குறித்து ஜெர்மன் வளர்ச்சி வங்கியின் அதிகாரிகளுடனான ஆலோசனைக் கூட்டம் ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 25.06.2019 அன்று ரிப்பன் மாளிகை கூட்டரங்கில் நடைபெற்றது.

சென்னை மாநகராட்சியின் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் மழைக்காலங்களில் மழைநீர் தேங்காத வண்ணம் சிறந்த வடிகால் வசதிகளை ஏற்படுத்தி வெள்ளப் பெருக்கினால் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்பினைத் தடுக்க ரூ.4,034 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கப்படும் என்று மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் 2014–ம் ஆண்டு சட்டப்பேரவையில் அறிவித்தார்.

விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகளை மேற்கொள்ள அடையாறு, கூவம், கோவளம் மற்றும் கொசஸ்தலையாறு என நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன. முதற்கட்டமாக கூவம் மற்றும் அடையாறு வடிநிலப் பகுதிகளில் 405 கி.மீ. நீளத்திற்கு உலக வங்கி நிதியுதவியுடன் ஒருங்கிணைந்த மழைநீர்வடிகால்வாய் கட்டப்பட்டுள்ளன.

ஆலந்தூர், புழுதிவாக்கம், சோழிங்கநல்லூர் ஆகிய பகுதிகளை உள்ளடக்கி, கோவளம் வடிநிலப்பகுதி M1, M2 மற்றும் M3 என மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டு சுமார் 360 கி.மீ. நீளத்திற்கு ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்க ரூ.1,243.15 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு ஜெர்மன் நாட்டு வளர்ச்சி வங்கியிடம் நிதியுதவி கோரப்பட்டுள்ளது.

கோவளம் வடிநிலப் பகுதிகளில் துரைப்பாக்கம், பெருங்குடி, பள்ளிக்கரனை, பாலவாக்கம், ஈஞ்சம்பாக்கம், காரப்பாக்கம் மற்றும் மடிப்பாக்கம் பகுதிகளை உள்ளடக்கிய M1, M2 திட்டக்கூறு குறித்த விரிவான திட்ட அறிக்கையினை ஆய்வு செய்ய ஜெர்மன் நாட்டு வளர்ச்சி வங்கி கலந்தாலோசகர்களை நியமித்துள்ளது. இக்கலந்தாலோசகர்கள் M1 மற்றும் M2 விரிவான திட்ட அறிக்கையினை ஆய்வு செய்து அறிக்கையினை ஜெர்மன் வளர்ச்சி வங்கியிடம் அளித்துள்ளனர். M1, M2 மற்றும் M3 திட்டப்பணிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் விரிவான திட்ட அறிக்கை குறித்து ஜெர்மன் நாட்டு வங்கி அதிகாரிகளுடனான ஆலோசனைக் கூட்டம் 25.06.2019 அன்று ரிப்பன் மாளிகையில் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., தலைமைப் பொறியாளர் (மழைநீர் வடிகால்) திரு.எல்.நந்தகுமார், மேற்பார்வை பொறியாளர் (மழைநீர் வடிகால்) திரு.ஆர்.பாலசுப்ரமணியம், ஜெர்மன் வளர்ச்சி வங்கியின் தலைமை அலுவலர் திருமதி கார்லா பார்க், ஜெர்மன் வளர்ச்சி வங்கியின் கோட்ட தலைமை அலுவலர் திருமதி லீனா ஆஃப்லின் மற்றும் ஜெர்மன் நாட்டு குழுவினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு:** **இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**